# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 201/மா/2017

ஆணை எண். 291/2017

நாள் : 19/12/2017

திருமதி S. சுப்பம்மாள்,
தஞ்சாவூர்.

– முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
தஞ்சாவூர்.

– எதிர் மனுதாரர்

தஞ்சாவூர், வடக்கு வாசல், சைரேஸ் சத்திரம் சாலை, 113 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி S. சுப்பம்மாள் அவர்களின் 16.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2017 அன்று பெறப்பட்டு 201/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு சம்பந்தமாக மாநகராட்சி ஆணையரின் அறிக்கைப் பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தஞ்சாவூர், வடக்கு வாசல், சைரேஸ் சத்திரம் சாலை, 113 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி S சுப்பம்மாள் என்பவர் தான் தஞ்சாவூர் மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றி, 30.06.2016–இல் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டதாகவும், சுமார் 15 மாதங்கள் கடந்த நிலையிலும் ஓய்வூதியப் பலன்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். தான் ஓய்வு பெற்ற நாளில் ஓய்வு பெற்ற சில பணியாளர்களுக்கு சம்பந்தப்பட்ட எழுத்தரை முறையாக கவனித்ததால் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு விட்டதென்றும், சம்பந்தப்பட்ட எழுத்தரை முறையாகக் கவனிக்கத் தவறிய தன்னுடைய விண்ணப்பம் பரிசீலிக்கப்படாமல் உள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் தனது 01.11.2017 நாளிட்ட கடிதத்தில் உரிய விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார். 30.06.2016 அன்று ஓய்வு பெற்ற முறையீட்டு மனுதாரர் தனது ஓய்வூதிய விண்ணப்பத்தினை 27.10.2016 அன்றுதான் சமர்ப்பித்துள்ளார் என்றும், தாமதமாகப் பெறப்பட்ட விண்ணப்பம் மீது 04.11.2016 அன்றே உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, ஓய்வூதியம் வழங்கக் கோரும் மனுதாரரின் கோரிக்கையினை ஏற்பதற்கு தணிக்கைச் சான்று வழங்கக்கோரி, 16.06.2017 நாளிட்ட கடித எண்.10874/பி2/2016–இல் தஞ்சாவூர், உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், 06.03.2017 நாளிட்ட கடித எண். 12209/சி2/2016–இல் நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். தணிக்கைச் சான்று கோரி பி–2 இருக்கையிலிருந்து 16.06.2017 அன்று அனுப்பப்பட்ட கருத்துருவில் உடன் நடவடிக்கை எடுக்கக் கோரி 06.03.2017 நாளிட்ட கடிதத்தில் நினைவூட்டப் பட்டது எவ்வாறு எனத் தெரிய வில்லை.

3. இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் தனது ஓய்வூதிய விண்ணப்பத்தினை 27.10.2016 அன்று சமர்ப்பித்துள்ளார். சுமார் 8 மாதங்கள் கடந்த நிலையிலேயே தணிக்கைச் சான்று வழங்கக் கோரி உள்ளாட்சி நிதித் தணிக்கை உதவி இயக்குநருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் ஓய்வு பெற்ற பெண் துப்புரவுப் பணியாளர். அரசுப்பணியில் சேர்ந்த அனைவரும் என்றாவது ஒருநாள் பணியிலிருந்து ஓய்வு பெற்றே ஆகவேண்டும். பணி ஓய்வும், இறப்பும்தான் ஒருவருக்கு நிரந்தரம். இதனை உணராமல் தற்பொழுது பணியில் இருப்பவர்கள் ஓய்வு பெற்ற பணியாளர்களின் கோரிக்கைகளை உடன் கவனிக்காமல் காலம் தாழ்த்துவது மிகவும் கண்டனத்துக்குரியது. மேலும், ஓய்வு பெற்ற பணியாளர்களிடம் பிரதிபலனை எதிர்பார்த்து நடவடிக்கை மேற்கொள்வது மிகவும் வெட்கக் கேடான செயல்" சமீப காலத்தில் ஓய்வு பெற்ற அடிப்படைப் பணியாளர்களிடமிருந்து ஓய்வூதியப் பலன்கள் மற்றும் சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை என்பதற்கான முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்திற்கு வந்த வண்ணம் உள்ளன. எனவே, உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் உயரதிகாரிகள் தாங்களும் ஒரு நாளைக்கு ஓய்வு பெறப் போகிறோம் என்பதை உணர்ந்து செயல்பட்டால் இதுபோன்ற காலதாமதம் ஏற்படாது என்பது நிச்சயம். எனவே, மனுதாரரின் ஓய்வூதிய பலன் கோரிக்கை குறித்து மேலும் காலம் தாழ்த்தாமல் உடன்நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரருக்கு ஓய்வூதியப் பலன்கள் விதிகளுக்கு உட்பட்டு வழங்குவதை உறுதி செய்யுமாறு தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுவதுடன், இந்நேர்வு சம்பந்தமான முடிவான அறிக்கையினை இரண்டு மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கும்படியும் ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 19–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. மாநகராட்சி ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

2. திருமதி S. சுப்பம்மாள்,
113, சைரேஸ் சத்திரம் சாலை,
வடக்குவாசல்,
தஞ்சாவூர் – 613 006.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்